1986 மே 10]

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1986-87 நிதிநிலை அறிக்கையில் 5 சதவீதத்தை 2 சதவீதமாகக் குறைத்து இருப்பதாக இங்கே சொன்னார்கள். கோழி வளர்ப்பது குடிசைத்தொழிலாகத் தமிழகத்தில் செய்யப்பட்டு வருகிறது. எனவே இந்த 2 சதவீத வரியையும் அறவே நீக்கி அந்த வகையில் வரி விலக்கு அளிக்க அரசின் பரிசீலனை இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி வளர்ப்பது என்பது குடிசைத்தொழில் என்ற அடிப்படையில்தான் 5 விழுக்காடு பலமுனை விற்பனை வரி என்று இருந்தது. 4-3-1984 முதல் 5 விழுக்காடு ஒருமுனை விற்பனை வரியாக மாற்றப்பட்டது. அதன்பின்னர் 17-3-1986-ல் அது 2 சதவீத ஒருமுனை விற்பனை வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனை மேலும் குறைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோல் பொருட்களுக்குத் தனி தொழிற்பேட்டை

735—(*வினா எண் 6184)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு ஏற்றுமதிக்காக தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் தனி தொழிற்பேட்டையை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-20)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் பரவாயில்லை. மாதவரத்தில் இதே மாதிரி ஒரு தோல் தொழிற் பேட்டை இருக்கிறது. அங்கு எத்தனை தொழிற்கூடங்கள் இருக்கின்றன? அந்தத் தொழிற்கூடங்களிலிருந்து வெளிநாடுகளுக்கு என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதனால் கிடைக்கக் கூடிய அன்னியச் செலாவணி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரத்திலே தோல் பொருள்களுக்கான தனி தொழிற்பேட்டை சிறப்பாக நடந்து வருகிறது. அங்கே அரசினுடைய 24 தொழிற்கூடங்களும், சிட்கோ கட்டித் தந்த 10 தொழிற் கூடங்களும், ஆக 34 தொழிற் கூடங்கள் அங்கே இருக்கின்றன.

அதேபோல டான்சியினுடைய நிர்வாகத்திலிருந்த பெரம்பூர், மாதவரம், பல்லாவரம் மற்றும் விண்ணமங்கலம் ஆகிய 4 தொழிற்கூடங்களை டால்கோவுக்கு மாற்றியிருக்கிறோம். அப்படி மாற்றப்பட்ட தோல் தொழிற்கூடங்களில் எந்தவிதமான பொருள்களும் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனாலும்கூட வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் டான்சி நிர்வாகத்தில் இருந்த தொழிற் கூடத்திலிருந்து தோல் பொருள்களை 1983—84 இல் கனடா, இத்தாலி, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும், 1984—85 இல் இத்தாலி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவிற்கும், 1985—86 இல் தென் கொரியா, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் சுமார் 1 கோடி 10 லட்சம் ரூபாய் அளவிற்குத் தோல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் தொழிற்கூடங்களினால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அது மட்டும் அல்லாமல் இப்போது புதியதாக தோல் வளர்ச்சி மையம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறோம். அங்கு என்னென்ன பொருள்களைத் தயாரிக்கிறார்கள். இப்போது தோல் வளர்ச்சி மையம் இருப்பதால் லாபம் வரும் என்று எதிர்பார்க்கிறார்களா அல்லது நட்டம் வரும் என்று எதிர்பார்க்கிறார்களா? எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டால்கோ பொறுத்த மட்டில், இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஒரு நிறுவனம். ஆரம்பத்திலே அது நட்டத்திலே இயங்கினாலும் கூட எதிர்காலத்தில் ஓரளவிற்கு லாபத்தை ஈட்டும் என்று எதிர் பார்க்கப் பெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழனி தொகுதியில் தொழிற்கூடங்கள்

736—(*வினா எண் 7829)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் பழனித் தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளதால் 15 நபர்களுக்குக் குறையாமல் தொழில் நடத்த முன் வருபவர்களுக்குத் தொழில்கூடங்களை அரசே அமைத்துக் கொடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், ஏப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?